றைய விடயங்களுடன், மாவட்டக் குடித்தொகையில் பெருந் தொகையானவர்களின் வாழ்க்கைத்தரத்தை நேரடியாகப் பாதிக்கின்றதனுல் முதலீடு செய்யப்படவேண்டிய முன்னுரிமைத்துறைகளாகக் கருதப்பட்டிருக்கும், நலத்துறை வசதிகளை முன்னேற்றுதல், குடிநீரை கிடைக்கச்செய்தல் ஆகியவற்றையும் வற்புறுத்துகின்றது.

மாத்தளை, புத்தளம் ஆகிய இரண்டு மாவட்டங்களினதும் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் உலக வங்கியின் நிதியிடலுடன் 1982இல் தொடங்கப்பட்டன. மாத்தளை மாவட்டத்தின் நிகழ்ச்சித்திட்டம் ஏனைய விடயங்களுடன் சிறு ஏற்றுமதிப்பயிர்களின் அபிவிருத்தி, மீள்காடாக்கல் ஆகியவற்றை வலியுறுத்தியவேளையில் புத்தளம் மாவட்டத்தின் நிகழ்ச்சித்திட்டம் முக்கியமாக நீர்ப்பாசனம், வீதி அபிவிருத்தி, தெங்குப்பயிர்ச்செய்கை ஆகியவற்றில் கவனம் செலுத்தியது. மாத்தளை மாவட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் மீதான செலவினம் 1983 இறுதி வரையில் ரூ. 1,450 இலட்சங்களாக விளங்கியதுடன் இதில் ரூ. 410 இலட்சம் 1983ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் செலவிடப்பட்டது. புத்தளம் மாவட்டத்தின் நிகழ்ச்சித்திட்டத்தின்மீது 1983 இறுதிவரை ரூ. 1,860 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. 1983ஆம் ஆண்டில் மட்டும் ஏற்பட்ட செலவினம் ரூ. 610 இலட்சங்களாக விளங்கியது.

புத்தளம் மாவட்டத்திலுள்ள கிராமிய ஒருங்கிணைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னுட்டு நிதியம், சுவீடன் பன்னுட்டு அபிவிருத்தி அமைப்பு ஆகிய இரண்டு மூலங்களின் நிதியிடலுடன் 1982 யூலையில் தொடங்கியது. ஐந்து ஆண்டுகள் செயற்றிட்டக் காலத்தைக் கொண்டதென எதிர்பார்க்கப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு ரூ. 4,060 இலட்சங்களாகும். தேயிலைச் சிறு உடைமைகளின் அபிவிருத்தி, நலத்துறை, கல்வி வசதிகளை முன்னேற்றல் ஆகியனவற்றிற்கு நிகழ்ச்சித் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டன. 1984-1986 காலப்பகுதியில் ஏற்படும் பின்னைய இரண்டு கூறுகளின் மொத்தச் செலவு சுவீடன் பன்னுட்டு அபிவிருத்தி அமைப்பிலிருந்தான கொடையின்மூலம் நிதியிடப்படும்.

## தொழில் நிலை

1983ஆம் ஆண்டில் அரசு, அரசுசார் ஆகிய இரண்டு துறைகளிலும் தொழில் வாய்ப்பு அதிகரித்தது. ஊழியர் சேம நிதியதரவுகளை அடிப்படையாகக் கொண்ட தனியார் துறையின் தொழில் நிலை பற்றிய இறுதி மதிப்பீடுகள் கிடைக்கவில்லை. நன்கமையாத தனியார் துறை, தனியார் துறையின் வெளிநாட்டு முதலீடுகளை அடிப்படையாகக் கொண்ட தொழில் முயற்சிகள் ஆகியவற்றில் தொழில் நிலை அதிகரித்திருப்பதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

அரசதுறையில் தொழில் நிலை 1983இல் 4,670 ஆல் அதிகரித்தது. அரசின் செலவினம் குறைக்கப்பட்டபோதும் அரச துறையில் 1 சதவீதம் கொண்ட இச் சிறிதளவு அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது.

அரசுசார் துறையில் தொழில் நிலை 0.2 சதவீதத்தால் மட்டும் அதிகரித்ததுடன் 1982 ஆம் ஆண்டின் 0.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ஓரளவு குறைவானதாகவும் இருந்தது. இதற்கு தொழிற்பாட்டுச் செலவைக் குறைக்கும் நோக்கில் இலங்கை போக்குவரத்துச் சபை, கடற்றொழில் கூட்டுத்தாபனம் சில அரசுசார் நிறுவனங்களின் ஆட்குறைப்புக் கொள்கையே முக்கிய காரணமாகும்.

ஊழியர் சேம நிதியுடன் தொழிற்படும் கணக்குகளை அடிப்படையாகக் கொண்ட 1983 ஆம் ஆண்டிற்கான நன்கமைந்த தனியார் துறையின் தொழில் நிலை பற்றிய இறுதி மதிப்பீடுகள் இதுவரை கிடைக்கவில்லை. எனினும், வெளிநாட்டு முதலீட்டில், குறிப்பாக நிச்சயமான புள்ளி விபரங்களைக் கொண்டிருக்கும் பகுதிகளின் தொழில் நிலை அதிகரித்திருக்கின்றது. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் தொழில் நிலை 1983 இல் 3,779 ஆல் அதிகரித்துள்ளது. அத்துடன் வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் ஆண்டின் முதலரைப் பகுதியில் 4,865 புதிய தொழில்கள் உருவாக்கப்பட்டதுடன் 1977-1983 காலப் பகுதியில் வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவின் தொழில் முயற்சிகளினால் உருவாக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்களின் மொத்த எண்ணிக்கை 26,944 இனை அடைந்தது.

தனியார் துறையின் கணிசமான பகுதி புள்ளி விபரங்கள் கிடைக்கப் பெறாத மரபுவழி வேளாண்மை, கட்டடவாக்கம், சுய தொழில்வாய்ப்பு போன்ற நன்கமையாத நடவடிக்கைகளில் இருக்கின்றது. எனினும் இத்துறைகளில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி, தொழில் நிலை அதிகரிப்புக்களை ஏற்படுத்தியிருப்பதன் மூலம் மீளாய்வுக்குரிய ஆண்டில் இத்துறைகளின் தொழில் நிலையில் சில அதிகரிப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ற கருத்திற்கு ஆதாரமாக போதியளவு காரணங்கள் இருக்கின்றன. தொழில் நிலையில் ஏற்பட்ட அத்தகைய அதிகரிப்புக்கள் பெரும்பாலும் நெற் செய்கை, சுரங்கமறுத்தலும் கல்லுடைத்தலும், வர்த்தகம், தனியார் போக்குவரத்து ஆகியவற்றில் காணப்பட்டன. நெற் செய்கையின் கீழான ஏக்கரளவு முன்னைய ஆண்டினைவிட 7 சத வீதத்தால் அதிகரித்ததுடன் அதன் உற்பத்தி 14 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்தது. போக்குவரத்து, சுரங்கமறுத்தலும் கல்லுடைத்தலும், வர்த்தகம் ஆகியன முறையே 5 சதவீத, 8 சதவீத, 5 சதவீத வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தன.

அட்டவணை 1.31 இல் காணக்கூடியவாறு 1978 ஆம் ஆண்டிலிருந்தும் தொழில் நிலையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் காணப்படுகின்றன. அதிகரித்த தொழில் நிலையில் பெருமளவு தனியார் துறையில் காணப்படுகின்ற வேளையில் அரசுசார் நிறுவனங்கள், அரச திணைக்களங்களிலும் ஓரளவு அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும், இறுதி ஐந்தாண்டு காலப் பகுதியினதும் ஆண்டுச் சராசரி அதிகரிப்பு வீதம், முதல் மூன்று ஆண்டுகளிலுமே அதிகரித்த தொழில்நிலை மிகக் கூடுதலாக இருந்தமையையும் அதன் பின்னர் புதிய தொழில் வாய்ப்புக்களின் மட்டம் குறைவடைந்தமையையும் எடுத்துக் காட்டியது.

## அட்டவணை 1.31

### அரச தனியார்துறைகளின் தொழில்நிலை மதிப்பீடுகள்

| ஆண்டு | அரச | | தனியார் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | அரச | அரசுசார் | கொழும்பு பெரும் பாகப் பொருளாதார ஆணைக்குழு | ஏனையவை * | |
| 1977 | 422,647 | 617,033 | — | 283,427 | 1,323,107 |
| 1978 | 446,085 | 681,034 | 261 | 321,690 | 1.449,070 |
| 1979 | 470,188 | 749,034 | 5,876 | 310,096 | 1,535,194 |
| 1980 | 476,086 | 769,122 | 10,538 | 348,597 | 1,604,343 |
| 1981 | 481,475 | 778,199 | 19,729 | 348,365 | 1,627,768 |
| 1982 | 484,802 | 784,370 | 24,926 | 320,753 | 1,614,851 |
| 1983 | 489,472 | 785,717 | 28,705 | வி.கி. | வி.கி. |

* ஊழியர் சேமநிதித்தரவுகளின் அடிப்படையில்

மூலங்கள்: கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு. இலங்கை மத்திய வங்கி.

நுகர்வோர் நிதி, சமூக பொருளாதார அளவீடுகளிலிருந்தும் பெறப்பட்ட தொழில் வாய்ப்பு உருவாக்கல் சூழ் நிலையின் குறிகாட்டி தொழிலின்மை வீதம் 1978/79 இல் 14.8 சதவீதத்திலிருந்து 1981/82 இல் 11.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருக்கின்றமையைக் காட்டுகின்றது. தொழிலின்மையின் இவ்வீதம் அண்மைய பத்தாண்டுகளில் பதிவு செய்யப்பட்ட மிகக்குறைந்த வீதமாக இருக்கின்றது.

### விலைகள்

1983 ஆம் ஆண்டில் விலை நடத்தையின் முதன்மைப் பண்பு யாதெனில் கடந்த இரண்டாண்டுகளில் விலைகளில் நிலவிய கீழ் நோக்கிய போக்கு மாற்றமடைந்தமையேயாகும். இக்காலத்தில் சில்லறை மட்டத்திலும் அதேபோன்று முதன்மைச் சந்தை மட்டத்திலும் விலைகளின் அதிகரிப்பு வீதத்தில் உயர்வு காணப்பட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளிலும் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிப் போக்கில் ஏற்பட்ட இடமாற்றம் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலும் அதே போன்று மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணிலும் அவதானிக்கப்பட்டது. 1983 இல் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட ஆண்டுச் சராசரி அதிகரிப்பு வீதமாக 1982 ஆம் ஆண்டின் 10.8 சதவீதம்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 14 சதவீதமாக அமைந்திருந்தது. மத்திய வங்கியின் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட இது தொடர்பான அதிகரிப்பு 1982 ஆம் ஆண்டின் 5.5 சத வீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1983 இல் 25 சதவீதமாக இருந்தது. எனினும், 1983 இல் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதம் 1980, 1981 ஆம் ஆண்டுகளில் அதிகரிப்பு வீதங்களைவிடக் குறைவாகவே இருந்தது.